# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



93

81

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திருமதி. ஆ.மணிமேகலை, பி.இ.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
க.எண். 6/12,17 பரமத்தி ரோடு (தெற்கு பகுதி)
நாமக்கல் – 637 001.
போன்: 04286–290067
e-mail: dtcp.namakkal@gmail.com

பெறுநர்
தலைவர்,
தட்டாங்குட்டை உராட்சி,
பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம்,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

ந.க.எண்.3234/2021 நாமா, நாள்:13.01.2022.

அம்மையீர்/ஐயா,

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – நாமக்கல் மாவட்டம்– குமாரபாளையம் வட்டம் – பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் – தட்டாங்குட்டை ஊராட்சி – குமாரபாளையம் அமானி கிராமம் – சர்வே எண்.310/1B, 311/1B2,311/2B–ல் 9.3675 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி– தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் – குறித்து.

பார்வை:
1. மனுதாரர் திரு.SASIT CAPITAL (Thiru.T.Vijaikannan), குமாரபாளையம் அவர்களின் விண்ணப்பம் நாள்.19.11.2021, 31.12.2021 மற்றும் 10.01.2022.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்.10.12.2021 மற்றும் 06.01.2022.
3. நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், அவர்களின் கடிதம் ந.க.எண். இ4/10304/2021, நாள்.10.11.2021.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/போ, நாள்.26.04.2021
5. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள்.04.06.2004.
6. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள். 04.05.2017.
7. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
8. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள்.23.09.2020.

9. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள்09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3).2017–1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/LA1, நாள்.08.09.2017.

******

**உத்திரவு:**

பார்வை 1 மற்றும் 2–ல் சுட்டிய கடிதங்கள் மூலம் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2–ல் சுட்டிய இவ்வலுவலகக் கடிதம் நாள். 10.12.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 1–ல் சுட்டிய 31.12.2021 நாளிட்ட கடிதம் மூலம் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக (பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானம்) தானபத்திரம் எண்.8813/2021 மற்றும் 8812/2021 நாள்.20.12.2021–ல் ஒப்படைக்கப்பட்ட பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிற்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ(நாமா) எண்.08/2022** என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)–ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனை:**

1. a) பார்வை 8–ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7–ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47(11)–ன்படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants ". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the

permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால், கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் (EWS) மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020–ன்படி EWS மனைகள் ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 10 மற்றும் 11–ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No:112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Read Estate (Regulation & Development Act, 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only afte registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.
5. பார்வை 6–ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3–ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/– ஐயும் மற்றும் விதி எண்.9–ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. பார்வை 5 மற்றும் 9–ல் காண் அரசாணையின்படி உரிய கட்டணங்களை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்களால் மனுதாரரிடமிருந்து பெறப்பட்டதனைத் தொடர்ந்து தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படப்படுகிறது.

**இணைப்பு:**
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(2 தொகுப்புகள் மற்றும் அசல் தானபத்திரம்)

13/1/22
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.
13.1.22

நகல்

1. "SASIT CAPITAL"
திரு.T.விஜயகண்ணன்(பார்ட்னர்),
கதவு எண்.357/4, M.G.R.நகர்,
குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமம்,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

2. வட்டார வளர்ச்சி அலுவலர்,
பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம்,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

3. Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA),
No:1A, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore,
Chennai – 600 008.

4. உதவி இயக்குநர் (நில அளவை), நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு.

5. தாசில்தார்
வட்டாட்சியர் அலுவலகம்,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

6. இருப்புக் கோப்பு.

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம்
தட்டாங்குட்டை ஊராட்சி மன்றம், தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி எஸ். புஷ்பா அவர்கள்

ஊ.ம.த.க.எண் : 7/2020-21

நாள் : 29-03-2022

பொருள் : மனை உட்பிரிவு – நாமக்கல் மாவட்டம் – குமாரபாளையம் வட்டம் – குமாரபாளையம் அமானி கிராமம், பள்ளிபாளையம் வட்டாரம் – தட்டாங்குட்டை ஊராட்சி – சர்வே எண் 310/1B, 311/1B2, 311/2B–ல் 9.3675 ஏக்கர் பரப்பு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை நாள் 04–05–2017
2) அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UDE4(3)த்துறை நாள் 09–12–2020
3) அரசாணை எண் 138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UDE4(3)த்துறை நாள் 04–06–2004
4) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண். 4383/2020/தி1 நாள் 08.12.2022
5) உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 3234/2021/ நா.மா நாள் : 13–01–2022 (ம.வ./நா.மா. எண் 08/2022)
6) குமாரபாளையம் சார்பதிவாளர் தான சாசன பத்திர எண் 8813/2021 நாள் 20.12.2021
7) தட்டாங்குட்டை ஊராட்சி மன்ற தீர்மான எண் 32/2022 நாள் 23.03.2022
8) திரு. டி. விஜய்கண்ணன், சஷ்டி கேப்பிடல், 357/4, எம்.ஜி.ஆர். நகர், குமாரபாளையம் அக்ரஹாரம், குமாரபாளையம் வட்டம் அவர்களின் விண்ணப்ப நாள் : 13-02-2022

******

**உத்திரவு :**

பார்வை 5 ல் கண்ட நாமக்கல் மாவட்ட நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலக அனுமதி கடிதத்தின்படி நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் வட்டாரத்திற்கு உட்பட்ட தட்டாங்குட்டை ஊராட்சியில் கிராம சர்வே எண் 310/1B, 311/1B2, 311/2B–ல் 9.3675 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் நிபந்தனைகளின்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ம.வ./நா.மா எண் 08/2022 என்ற எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும், நகர ஊரமைப்புத் துறை ந.க.எண் 3234/2021 நா.மா 13.01.2022 அவர்களின் அனுமதியின் படியும் நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் வட்டாரம், தட்டாங்குட்டை ஊராட்சி கிராம சர்வே எண் 310/1B, 311/1B2, 311/2B–ல் 9.3675 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலமானது நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்படாத (Unclassified Area) பகுதியில் அமைகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உத்தேச மனைப்பிரிவிற்கான பரப்பு :**

9.3675 ஏக்கர்

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமையும் இடத்திற்கு மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 3ல் காணும் அரசாணையின்படி மேற்கண்ட இடத்திற்கு 3% சந்தை மதிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்ததின்படி மனுதாரர் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பில் பின்வருமாறு கட்டணம் செலுத்தியுள்ளார்.

மனையிட ஒப்புதல் கட்டணம் : 9.3675 x 10,00,000 = 9370000x3/100 ரூ. 2,81,100

| | |
|---|---|
| 0217-Urban Development – 60 other Urban Development Scheme – 800 Other Receipts- As Receipt Under land use conversation – 27 Non Taxation fees – 09 Collections **D.P.C.D.P.C.217-60-800-AS-22709** | சலான் மூலம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. இ–சலான் எண் 20220322009842/23–03–2022<br><br>SBI Tiruchengode நாள் 23.03.2022 |

தற்சமயம், மேற்படி பள்ளிபாளையம் வட்டாரம், தட்டாங்குட்டை ஊராட்சி குமாரபாளையம் அமானி கிராமம் ச.எண் 310/1B, 311/1B2, 311/2B–ல் 9.3675 பரப்பளவில் வரைபடத்தில் கண்டுள்ள 194 வீட்டு மனைகளுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊராட்சியின் இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

**<u>இறுதி ஒப்புதல் உத்திரவு வழங்கும் மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>**

| விபரம் | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | – | 9.3675 ஏக்கர் | 100 % |
| ஒதுக்கிய மனைகள் | – | 194 | |
| பொது ஒதுக்கீடு<br>1) மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. | – | 2756.73 ச.மீ (10.06 %) | |
| 2) உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | – | 10528.88 ச.மீ | |
| 3) உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | – | 145.32 ச.மீ | 0.53 % |
| 4) தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது | – | 145.11 ச.அடி | 0.53 % |
| 5) ஒதுக்கப்பட்ட நலிவடைந்த பிரிவினருக்கான (EWS) மனைகளின் பரப்பு | – | 2741.17 ச.மீ | 10.01 % |
| மனை எண்கள் | – | EWS 76 முதல் 84 வரை, 87 முதல் 94 வரை, 97 முதல் 105 வரை, 108 முதல் 116 வரை மற்றும் 118 முதல் 126 வரை | |

**<u>நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள் :</u>**

1) பார்வை 5ல் காணும் உதவி இயக்குநர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், அவர்களின் உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளையும் பின்பற்றப்பட வேண்டும்.
2) உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றியமைத்தல் கூடாது.
3) ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதியில்லை.
4) மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால், உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்.
5) அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலில் அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்திரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.
6) பத்திரப்பதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பு ஆவார்.
7) திறந்தவெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனைநிலங்களுக்காக உயர் அழுத்த – சாதாரண மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின்வசதி செய்து கொள்ள அனுமதி இல்லை.
8) விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைப்பிரிவும், பத்திரப்பதிவு செய்யும்போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபடம் இணைத்து பத்திரப்பதிவு செய்திட வேண்டும்.

95

9) மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் வரும் காலங்களில் கண்டறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி ரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

S. [signature] 24/03/2022
தலைவர்
தட்டாங்குட்டை ஊராட்சி
பள்ளிபாளையம் வட்டாரம்

பெறுதல் :

சஷ்டி கேப்பிடல்,
திரு. டி. விஜயகண்ணன் (பார்ட்னர்),
கதவு எண் 357/4, எம்.ஜி.ஆர். நகர்,
குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமம்,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல் :

1) உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்
2) சார்பதிவாளர், குமாரபாளையம் அலுவலகம், நாமக்கல் மாவட்டம்
3) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பள்ளிபாளையம் வட்டாரம்



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate